# அரக்கோணம் நகராட்சி
# சாதாரண நகரமன்றக் கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.10 நாள் 27.06.2022

பொருள் : நகரமன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள். 30.06.2022 வியாழன்கிழமை – சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் அறிவித்தல் –சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்ற சாதாரணக் கூட்டம் 30.06.2022 வியாழன்கிழமை மாலை 4.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்றக் கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நகரமன்றத் துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(திருமதி.லட்சுமி பாரி)
நகரமன்ற தலைவர்,
அரக்கோணம் நகராட்சி.

இடம் : அரக்கோணம் நகராட்சி.

நாள் : 27.06.2022

**<u>பொருள் எண் 01</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2022 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண் 02</u>**

அரக்கோணம் நகராட்சியில் 15–வது நிதி மான்யத்தில் 2021–2022 ஆம் ஆண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வார்டு – பி, பிளாக் எண்.33, நகரளவு எண்.3–ல் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் (URBAN HELTH AND WELLNESS CENTRE) மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்தில் கட்டுதல் பணிக்கு ஒப்பந்த விதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. நிர்வாக நலன் கருதி, மேற்படி பணியினை வார்டு எண்.4 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வார்டு –B, பிளாக் எண்.368, நகரளவு எண்.67/861/10/11–ல் இடம் மாற்றி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)திட்டப்பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான இடம் மாற்றி செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.993 /2021/இ1)**

**<u>பொருள் எண் 03</u>**

அரக்கோணம் நகராட்சியில் 15–வது நிதி மான்யத்தில் 2021–2022 ஆம் ஆண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட சில்வர்பேட்டை உரக்கிடங்கில் மதிப்பீடு ரூ.34.00 இலட்சத்தில் Construction of Resource Recovery Shed கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தவிதிகளின் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி, Construction of Resource Recovery Shed கட்ட தேர்வு செய்யப்பட்ட சில்வர்பேட்டை பகுதியானது நகராட்சியிலிருந்து சுமார் 8.00 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால், நகரில் சேகரமாகும் மக்காத குப்பைகளை, உடனுக்குடன் அப்புறப்படுத்துவது சிரம்மாக உள்ளது. எனவே, நகராட்சி எல்லைக்குள் அமைந்தால், மக்காத குப்பைகளை சேகரம் செய்வது சிரமமில்லாமல் இருக்கும். எனவே, நகராட்சியின் நலன் கருதி நகராட்சி அருகாமையில் உள்ள நேருஜி நகர் பகுதியில் உள்ள குப்பைக்கிடங்கில் மாற்றி மேற்படி கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) திட்டப்பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான இடம் மாற்றி செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.993 /2021/இ1)**

**<u>பொருள் எண் 04</u>**

அரக்கோணம் நகராட்சியில் 15–வது நிதி மான்யத்தில் 2021–2022 ஆம் ஆண்டில் அலுவலக வளாகத்தில் Construction of Public Health Section Vehicle Parking Shed ரூ.30.00 இலட்சத்தில் கட்டுவதற்கு நகராட்சி வளாக உட்பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தவிதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி, Construction of Public Health Section Vehicle Parking Shed நிர்வாக நலன் கருதி ரத்தன்சந்த் நகர் பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் எதிர்பகுதியில் உள்ள காலியிடத்தில் கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) திட்டப்பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான இடம் மாற்றி செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.993 /2021/இ1)**

**<u>பொருள் எண் 05</u>**

அராசணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.06.2022–ன் அரசாணையின்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–22ம் ஆண்டிற்கு அரக்கோணம் நகராட்சியில் மதிப்பீடு ரூ. 260.66 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Name of Work | Proposed category | Project Cost Approved by PSMC | KNMT Share | AMRUT Share |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Knowledge Center and Study Center at Ward No.4 TNHB Area (TS No.14) | Knowledge Center | 180.66 | 180.66 | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | Modernization of LPG Crematorium at Nehruji Nagar Ward -05 (Ward B Block No-7, TS No.110) | Crematorium (Modern) | 49.00 | 49.00 | -- |
| 3 | Park at Madhava Nagar in Ward No.2 TS No.13/9 | Park | 31.00 | 19.61 | 11.39 |
| | | **Grand Total** | **260.66** | | |

<u>அலுவலக குறிப்பு</u>
1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிகளுக்கு தலைமை பொறியாளர், சென்னை மற்றும் மண்டல செயற்பொறியாளர், வேலூர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. திருத்திய வரவு செலவு திட்டம் 2022-23ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண். 566/2022/இ1)**

**<u>பொருள் எண் 06</u>**

அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண்.11-ல் உள்ள போலாட்சியம்மன் கோயில் வடக்குப் பகுதியில் இருந்த பழைய கட்டடம் அரசு அறிவுறுத்தலின் அடிப்படையில், இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. தற்பொழுது மேற்படி பணிக்கு பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் பள்ளியில் சேர்க்கை எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், புதியதாக வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தருமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி பள்ளி வளாகத்தில், காலியாக உள்ள வடக்குப் பகுதியில் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டடம் (வகுப்பு அறைகள் தரைதளம் இரண்டு வகுப்பறைகள் மற்றும் முதல் தளம் இரண்டு வகுப்பறைகள்) கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.25,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் தோரய செலவினத் தொகை ரூ.25,00,000/-னை நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : -</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.25,00,000/-னை இந்நகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**பொருள் எண் 07**

அரக்கோணம் நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.10338/2021/SS2 நாள் 30.05.2022–ல் தெளிவுபடுத்தியுள்ள அறிவுரைகளின் அடிப்படையில், தென்மேற்கு பருவமழை 2022–2023 எதிர்நோக்கப்படுவதால், முன்னெச்சரிக்கை பணிகள் செய்யவும், தேவையான உபகரணங்கள் வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளவும், அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சியில் உள்ள 6 எண்ணிக்கை ஆயில் இன்ஜின்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ( Fire House, Foot Value, Bar Nife, Tourch Light, மண்வெட்டி) | 1,00,000/– |
| 2 | Supply and Delivery of Casurina poles and Sand Bags | 80,000/– |
| 3 | பருவமழை அதிகமாக பெய்தால் தேவையான அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ள தனியரின் மூலம் ஜே.சி.பி வாகனம் வாடகைக்கு வாங்கி இயக்கும் பணி. | 50,000/– |
| 4 | நகரில் உள்ள பிரதான பெரிய கால்வாய்களில் உள்ள வண்டல் மண்ணை ஜே.சி.பி / L &T வாகனம் மூலம் முழுமையாக அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல், ( வார்டு எண் 1முதல் 18 வரையில் உள்ள பிரதான பெரிய கால்வாய்கள்) | 5,00,000/– |
| 5 | நகரில் உள்ள பிரதான பெரிய கால்வாய்களில் உள்ள வண்டல் மண்ணை ஜே.சி.பி / L &T வாகனம் மூலம் முழுமையாக அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் (வார்டு எண் 19 முதல் 36 வரையில் உள்ள பிரதான பெரிய கால்வாய்கள்) | 5,00,000/– |

**அலுவலக குறிப்பு : –**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**பொருள் எண் 08**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்ட வார்டுகளில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு பொருத்தி தருதல் மற்றும் கைப்பம்பு அகற்றி சிறுமின் விசைப்பம்பாக மாற்றி அமைத்து தருமாறு நகர மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டுள்ளவாறு பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.என் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | அண்ணா தெரு விரிவாக்கப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு அமைத்தல் | 2.10 |
| 2 | 2 | ஜெய்பீம் நகர் 2–வது தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 3 | 4 | சாஸ்தி நகர் 1–வது தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 4 | 8 | கிழக்கு காமராஜர் நகரில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 5 | 9 | பன்னீர் செல்வம் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 6 | 10 | சிவராஜ் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 7 | 11 | போலாட்சியம்மன் கோயில் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 8 | 12 | சாவடி தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 9 | 15 | கலைவாணர் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 16 | தர்மராஜா கோயில் பின்புறம் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 11 | 19 | ஜீவானந்தம் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 12 | 20 | அன்னை கஸ்தூரிபாய் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 13 | 21 | லட்சியனார் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 14 | 24 | ஏ.பி.எம்.சர்ச் 6–வது தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 15 | 25 | 25–வது வார்டு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு அமைத்தல் பணி | 2.10 |
| 16 | 27 | லட்சுமணன் நகர் 2–வது தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 17 | 28 | சத்தியவாணி முத்து நகர் 3–வது தெரு பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 1.00 |
| 18 | 29 | சோமசுந்தரம் நகர் பகுதியில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |
| 19 | 30 | அம்மன் கோயில் தெரு பகுதியில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |

| | | | |
|---|---|---|---|
| 20 | 34 | முத்தப்பன் தெருவில் இந்தியா மார்க் 2 கைப்பிடி பம்பினை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைக்கும் பணி | 1.10 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் முன்னுரிமை அடிப்படையில் நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப பொதுநிதி / குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**பொருள் எண் 09**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்க்கண்ட வார்டுகளில் உள்ள சிறுபாலங்கள் மிகவும் தாழ்வாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் வேகமாக செல்லமுடியாமல் சாலையின் மேற்பகுதியில் செல்கிறது. பொதுமக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். வரும் வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக சிறுபாலங்கள் அமைத்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதியின் நகரமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்ததன் பேரில் கீழ்க்கண்ட பகுதியில் சிறுபாலங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட பின்வருமாறு மதிப்பீடு தொகைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. செலவித்தொகையினை பொதுநிதி/ எதிர் வரும் காலங்களில் பெறப்படும் அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | **1** | கிரிசிங் நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.15 |
| 2 | 6 | டவுன் ஹால் 3–வது தெருவில் இரண்டு இடங்களில் சிறுபாலம் அமைத்தல் பணி | 3.00 |
| 3 | 8 | ஜெகஜீவன்ராம் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 |
| 4 | 9 | சங்கம் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 |
| 5 | 10 | லாசர் தெரு பகுதியில் இரண்டு இடங்களில் சிறுபாலம் அமைத்தல் பணி | 3.00 |
| 6 | 12 | போலீஸ்லைன் தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 |
| 7 | 18 | கண்ணன் மாவுமில் தெரு பகுதியில் இரண்டு இடங்களில் சிறுபாலம் அமைத்தல் பணி | 3.00 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 19 | பாலசுப்பிரமணியன் தெரு மற்றும் சாமுண்டீஸ்வரி கோயில் தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 3.00 |
| 9 | 22 | பிள்ளையார் கோயில் தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 |
| 10 | 26 | டி.என் நகர் 7–வது தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 |
| 11 | 30 | வி.பி கோயில் தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.50 |
| 12 | 31 | புதுப்பேட்டை 2–வது தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 |

<u>அலுவலக குறிப்பு</u> :–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் முன்னுரிமை அடிப்படையில் நகராட்சியின் நிதி / பெறப்படும் அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 10</u>

அரக்கோணம் நகராட்சியில் நேருஜி நகர் பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடை பராமரிப்புப் பணி மேற்கொள்ள 31.05.2021 முதல் 30.05.2022 வரை பிரேதங்கள் எரியூட்டும் பணி மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகரமன்றத் தீர்மானம் எண். 891 நாள் 31.05.2021–ல் அனுமதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, எம்.எச்.டி, இஞ்சினியரிங் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மன்றத்தின் அனுமதி பெற்று மறு ஒப்பந்தப்புள்ளிகோர உள்ளாட்சி தேர்தல் நடைமுறையில் இருந்ததால் (Code of Conduct) மறு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டது. கொரோனா காலம் என்பதால், தொடர்ந்து எரிவாயு தகன மேடை, பிரேதங்கள் எரியூட்டும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை பொதுமக்களின் நலன் கருதி, அதே ஒப்பந்ததாரர் மூலம் ஏப்ரல், மே மாதங்களில் பராமரிப்புப் பணி மேற்கொண்டதையும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், 2022–2023 ஆம் ஆண்டிற்கு 01.08.2022 முதல் 31.03.2023 வரை பிரேதங்கள் எரியூட்டும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 11</u>

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பூக்காரத் தெரு, விஜயராகவன் சந்து தெரு, சத்தியவாணி முத்து நகர் 4–வது தெரு, தர்மராஜா நகர் மற்றும் விண்டர்பேட்டை பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்பு இயக்க பயன்படுத்தப்படும் சின்டெக்ஸ் டேங்க் அமைந்துள்ள ஐந்து இடங்களில் உள்ள மேடை முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளதால், மேற்படி இடங்களில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் மேடையினை புதியமாக அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/– மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் செலவினத் தொகையினை இந்கராட்சி பொநிதி / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 12</u>

அரக்கோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மராமத்து பணிகள் செய்யப்பட்டு வருகிறது. நகரில் மொத்தம் 7 இடங்களில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் சில்வர்பேட்டை பகுதியில் அமைந்துள்ள 11.00 எம்.எல்.டி. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்ப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து அருகில் உள்ள ஏரியில் விடப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள் 19.12.2020 ந.க.எண். 26880/2018/UGSS –ல் நகராட்சிக்கு அருகில் உள்ள ஊராட்சிகள் , பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து தனியார் லாரிகள் மூலம் சேகரிக்கப்படும் நச்சுத்தொட்டி கழிவுநீரினை பொதுமக்களுக்கு எந்த விதமான சுகாதாரக் கேடுகள் ஏற்படாதவாறு, முறையாக லாரி உரிமையாளர்களைக் கண்டறிந்து, நகராட்சியில் பதிவு செய்து, அதற்குண்டான சர்வீஸ் கட்டணம் நிர்ணயம் செய்து, பராமரிக்கப்படும் கழிவுநீர் உந்து நிலையத்தில் லாரி உரிமையாளர்கள் வந்து நகராட்சி நச்சுத் தொட்டியில் கழிவுநீரினை ஊற்றி விட்டுச்செல்ல உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டதன்பேரில், நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஏதேனும் ஒரு கழிவுநீர் உந்து நிலையத்தில் (Septage Receiving Station) நச்சு நீர் சேகரம் தொட்டி அமைக்கவும், மேற்படி பணிக்கு தேவையான இதர பணிகள் மேற்கொள்ளவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,90,000/–னை செலவினத் தொகைக்கும் பணி மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை பாதாள சாக்கடை திட்ட வைப்பு நிதியின் வட்டித் தொகையில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 13</u>

அரக்கோணம் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் 2053 தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. 23.06.2022 ஆம் தேதியன்று திருவண்ணாமலை Technical Training & Development Centre, Energy Efficiency Energy Conservation பயிற்சி வகுப்பில் தங்கள் நகராட்சிப் பகுதியில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளுக்கு தானியங்கி கருவி பொருத்தி (Automatic Timer Switch Box) மின்சாரத்தினை தேவைக்கேற்ப சிக்கனமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், நகராட்சிக்கு இதன் மூலம் செலவினம் குறையவும் வாய்ப்புள்ளதாக அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், நகராட்சியில் போதுமான மின்பணியாளர் இல்லாததால், குறித்த நேரத்தில் தெருவிளக்குகள் அணைக்கும் பணி (On and Off) செய்தல் பணி குறிப்பிட்ட நேரத்தில் செய்ய தடைபடுவதால், மின்சாரம் உபயோகப்படுத்தும் நேரம் கூடுவதால் மின்சார செலவு அதிகமாகிறது. மேற்படி நகராட்சியில் மின்சாரத் தேவையை சிக்கனமாகவும், மின்கட்டணத்தினை குறைக்கவும், Single Phase Timer Switch Box 40 Nos & Three Phase Timer Switch Box 12 Nos வாங்கிப்பொருத்த ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7,50,000/-னை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) செலவினத் தொகையினை பொதுநிதி / அரசு நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 14</u>

அரக்கோணம் நகராட்சியில் தக்கோலம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில், மோட்டார் இயக்குதல் மற்றும் பகல் இரவு நேரங்களில் நீரேற்று நிலையங்களில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளவும் தேவையான பணியாட்கள் வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்கள் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மன்றத் தீர்மான எண்.846, நாள்.08.02.2021 அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து, ஒப்பந்ததாரர் திரு.சண்முகம் மூலமாக பணியாளர்கள் அமர்த்தி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் அமைத்துக்கொள்ள அளவுகோல் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கப்படவுள்ள நிலையில் மேற்படி பணிக்காலம் பிப்ரவரி மாதம் முடிவுற்ற நிலையில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் விதிமுறை நடைமுறையில் இருந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை கால நீட்டிப்பு செய்ய

முடியவில்லை. தற்போது மேற்படி பணிக்கு 01.06.2022 முதல் 31.05.2023 வரை ஒப்பந்ததாரரை நியாமிக்க மன்ற பொருள் வைக்கப்பட்டுள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பராமரிப்பு பணியாட்கள் தொடர்ந்து மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மூன்று மாதங்கள் பணிபுரிந்து உள்ளார்கள். மேற்படி 3 மாதங்களுக்கான ஊதிய தொகையினை ரூ.2,63,000/– ஐ ஏற்கனவே நகர் மன்ற தீர்மான எண். 846 நாள் : 08.02.2021–ல் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையிலேயே பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.977/2021/இ1)**

**பொருள் எண் 15**

அரக்கோணம் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் 22 எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. 22 எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்குகளில் 40 எண்ணிக்கை பழுது ஏற்பட்டு எரியாமல் உள்ளது. மேற்படி உயர்கோபுர மின்விளக்குகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மின் உபரி பொருட்களான, 200 Wats Led Fitting, PVC Switch Box, Switch Box Angle Stand Fuse Carrier 100 Amps, Four Pole MCB Switch, High Mass Gear Box ஆகியவற்றினை உயர்கோபுர மின்விளக்குகளில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்களை வாங்கிப் பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.9,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) செலவினத் தொகையினை பொதுநிதி / அரசு நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**பொருள் எண் 16**

அரக்கோணம் நகராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–2023 நிதியாண்டில் புதியதாக அரக்கோணம் நகராட்சிக்கு சந்தை அமைத்தல் பணிக்கு ரூ.600.00 இலட்சத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது . மேற்படி பணிக்கு மதிப்பீடு தயார் செய்தல் பணிகள் மேற்கொள்ள கலந்தலோசகர் நியமனம் செய்து பணிகள் செய்து முடிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில் , கலந்தலோசகர் நியமனம் செய்ய மதிப்பீடு ரூ.18,88,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது . மேற்படி பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று

20.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | TERRA AMATA DESIGN CONSTRUCTION<br>S2, ROYAL COURT, BLASSOM AVENUE<br>MAHENDRA WORLD CITY CHENNAI-02 | ரூ.1888000/- |
| 2 | M SQUARE ARCHITECTS<br>Y2, FLAT NUMBER 18, SAF GAMES VILLAGE<br>KOYEMBEDU-107 | ரூ.2739606/- |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள TERRA AMATA DESIGN CONSTRUCTION அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 17</u>

அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண். 27-ல் உள்ள சோமசுந்தரம் நகர் 1-வது தெரு மிகவும் பழுதடைந்துள்ளது. இச்சாலை புளியமங்கலம் கிராமம் மற்றும் இரயில்நிலையம் செல்லும் பிரதான சாலையாக உள்ளது. இச்சாலையில் பள்ளி வாகனங்கள் செல்கிறது. மேலும், இச்சாலையில் பாதாள சாக்கடை திட்டப்பணி நடைபெற்றதால் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9,60,000/- ஆகும். பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

<u>பொருள் எண் 18</u>

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் 2021-2022 ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) 10 நீட்டிப்பு செய்து கொள்ள 14 தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த 17.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் பணி 16.02.2022 தேதியுடன் பணி உத்திரவு முடிவடைந்தது. அதனை

தொடர்ந்து பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் 31.05.2022 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் மேற்காணும் பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது 01.06.2022 முதல் 31.08.2022 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ .3.25 இலட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 483/2018/எச்1)**

**பொருள் எண் 19**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி** அரக்கோணம் நகராட்சி**யில்** "நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் ( People's Movement for Clean Cities)" **தொடர்பாக** 03.06.2022 **அன்று தொடங்கி மாதத்தில் இரண்டு வாரங்களுக்கு சனிக்கிழமையில்** 3 **மாதங்களுக்கு தொடர்ந்து பொதுமக்களுக்கு** விழிப்புணர்வு **நடத்தி திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செய்து முடிக்க அரசாணை(நிலை) எண்** :79 **நகராட்சி நிர்வாகம்** (ம) **குடிநீர் வழங்கல்** (MA2) **துறை நாள்** 02.06.2022 **ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும்** விழிப்புணர்வு **பணிகளை சிறப்பாக நடத்திட கீழ்காணும் பணிகள் செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**1,05,000/- **விழிப்புணவு** (IEC) **பணிக்கான நிதியிருந்து செலவினம் மேற்கொள்ளவும்** மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **தோரய செலவினம் ரூ** |
|---|---|---|
| 1 | விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த நாற்காலிகள் மற்றும் சர்மினா பந்தல் அமைத்தல் | 20,000 |
| 2 | பேனர்கள் தயார் செய்தல் | 25,000 |
| 3 | துண்டு பிரசுரம் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்குதல் | 35,000 |
| 4 | நகராட்சியில் உள்ள வாகனங்களில் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து தருவது தொடர்பாக பொதுமக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பேனர்கள் அமைத்தல் | 35,000 |
| 5 | நகராட்சியில் உள்ள வாகனங்கள் வருவதை பொதுமக்கள் அறியும் வண்ணம் வாகங்களில் ஒலிபெருக்கி அமைத்தல் | 25,000 |
| | **மொத்தம் ரூ.** | **1,05,000** |

<u>அலுவலக குறிப்பு</u> :

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 687/எச்1/2022)**

<u>பொருள் எண் 20</u>

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி** அரக்கோணம் நகராட்சி**யில்** "நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் ( People's Movement for Clean Cities)" **தொடர்பாக** உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரியுள்ளதற்கு கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட)** | **இளைய டிஜிட்டல் காஞ்சிபுரம் தொகைரூ (GST உட்பட)** | **கோபி ஆர்ட்ஸ் அரக்கோணம் தொகைரூ (GST உட்பட)** |
|---|---|---|---|---|
| 1 | 6X4 பேனர் (ஒன்றின் விலை) | 700 | 750 | 780 |
| 2 | 3X3 பேனர் (ஒன்றின் விலை) | 500 | 520 | 540 |
| 3 | 8X8 பேனர் (ஒன்றின் விலை) | 1050 | 1100 | 1080 |
| 4 | நகராட்சியில் உள்ள வாகனங்களில் மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து தருவது தொடர்பாக பொதுமக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பேனர்கள் அமைத்தல் 6X3 பேனர் மற்றும் Frame உட்பட (ஒன்றின் விலை) | 2500 | 2600 | 2650 |
| 5 | துண்டு பிரசுரம் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்குதல் (A4 அளவில் வண்ண கலர்படம் 20000 எண்ணிக்கை அச்சடித்தல்) | 35000 | 36000 | 38000 |

| வ.எண் | பணியின் விவரம் | M.P. சப்ளையர்ஸ், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட) | S.S.சப்ளையர்ஸ், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட) | மாதா சப்ளையர்ஸ், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட) |
|---|---|---|---|---|
| 1 | விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த நாற்காலிகள் மற்றும் சர்மினா பந்தல் அமைத்தல் (நிகழ்ச்சி ஒன்றுக்கு) | 6300 | 6500 | 6600 |
| **வ.எண்** | **பணியின் விவரம்** | **புதிய துர்கா எலக்ரானிக், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட)** | **ஜான்ஸி எலக்ரானிக், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட)** | **துர்கா எலக்ரானிக், அரக்கோணம் தொகைரூ (GST உட்பட)** |
| 1 | நகராட்சியில் உள்ள வாகனங்கள் வருவதை பொதுமக்கள் அறியும் வண்ணம் வாகனங்களில் ஒலிபெருக்கி அமைத்தல் (ஒன்றின் விலை) | 3600 | 3800 | 4000 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் மூலம் அப்பணிகளை செய்து முடிக்கவும், **அதற்கான செலவினங்கள் மேற்கொள்ளவும்**, மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 687/எச்1/2022)**

**பொருள் எண் 21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல் , தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல் , தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 111 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக

அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் வெளிகொணர்வின் மூலம் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 30813/J3/2018 நாள்: 11.12.2018.ல் ஆணை வழங்கப்பட்டு ஆணையர் , அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/2018/எச்1 நாள்: 30.07.2020–ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு 01.08.2020 முதல் 31.07.2021 வரை வெளிக்கொணர்வின் மூலம் 195 தூய்மை பணியாளர்களை வழங்க கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 31.07.2021 தேதியுடன் பணி உத்திரவு முடிவடைந்ததால் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து வெளிக்கொணர்வு பணியினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து மன்றத்தால் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி ஏற்கனவே 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாதங்களுக்கு வெளிக்கொணர்வு பணியினை புதுபித்து வழங்கிட நகரமன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அதன் நீட்டிப்பு காலம் முடிவடைதுள்ளதால், 01.07.2022 முதல் 30.09.2022 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கிடவும், அற்கான தோராய செலவினம் ரூ. 79.00 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண். 826/2015/எச்1)**

**பொருள் எண் 22**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –**28** அவர்களின் கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் **07.04.2022** அன்று நடைபெற்ற நிதி நிலை கூட்டத்தில் அறிவித்துள்ளபடி சாலையோர வியாபாரிகளுக்கான திட்டம் குறித்து கீழ் காணும் படி அறிவிப்பு செய்யப்பட்டது.

**“ தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமமும்மின்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்”**

மேலும் தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தினை ஒழுங்கு படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் **2015** பிரிவு **3**–ன்படி தெருவோர வியாபராரிகளை கண்டறிந்து அவர்களை ஒழுங்குமுறைப்படுத்த அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே மேற்காணும் அறிவிப்பு மற்றும் மேற்படி சட்டத்தின்படி தெருவோர வியாபாரிகளை கணக்கெடுப்பது, விற்பணை சான்று வழங்குவது மற்றும்

அடையாள அட்டை (Smart Card) i.e Bio Metric and QR / Bar Code – வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1620 /2016/எப்1)**

(திருமதி.லட்சுமி பாரி)
நகரமன்ற தலைவர்,
அரக்கோணம் நகராட்சி.